DEPOSITION OF WITNESS

(Chapter of XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, SRIVILLIPUTTUR

**S.C.No.97/2022**

**LW 11= PW7** **Date.23.6.2026**

Deposition of : PW7 Witness for prosecution /Defence/Court

| | | | |
|---|---|---|---|
| Name | : செ.பாபு (சார்பு ஆய்வாளர்) | Caste | : |
| Father's Name | : | Religion | : |
| Village | : | Calling | : |
| Taluk | : | Age | : |

---

**1,2 எதிரிகள் ஆஜர் – 1,2 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**

முதல் விசாரணை –

நான் தற்போது சங்கரன் கோவில் நகர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன்.கடந்த 2021ம் ஆண்டு திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணி புரிந்த போது 11.2.2021ம் தேதி 14.00 மணிக்கு திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலைய பொருப்பில் இருந்த போது திருவில்லிபுத்தூர் நெசவாளர் காலனி வடபுறம் குடியிருந்து வந்த கோவிந்த மகன் ராமர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று புகார்மனுவின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 66 /2021 பிரிவு 436 ,506 (2) இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். என்னால் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை அ.சாஆ 2 ஆகும். மேற்படி வழக்கு பதிவு செய்திருந்ததை காவல் ஆய்வாளர் அவர்களுக்கு தெரிவித்த போது அவர்கள் வேறு வழக்கு விசாரணையில் இருந்ததால் இந்த வழக்கினை என்னை விசாரணை செய்யச்சொன்னார். வழக்கு கோப்பினை எனது விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றைய தினம் 15.00 மணிக்கு வழக்கு சம்வம் இடம் சென்று சாட்சிகள் ராஜீ , சுப்புராமன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்யப்பட்டது . மாதிரி வரைபடம் அ.சா.ஆ 3 ஆகும். பார்வை மகஜர் அ.சா.ஆ 4 ஆகும். அதே சாட்சிகள் முன்னிலையில் 16.10 மணிக்கு சம்பவ இடத்தில் எரிந்த நிலையில் கிடந்த 3 மரக்கட்டளைகளை அத்தாட்சியின்பேரில் கைப்பற்றினேன். மேற்படி மரக்கட்டகளை கைப்பற்றியதற்கான அத்தாட்சி அ.சா.ஆ 5 ஆகும். எரிந்த நிலையில் கைப்பற்றப்பட்ட மரக்கட்டை சா.பொ.1 (3 வரிசை ) ஆகும். மேற்படி வழக்கின் சாட்சிகள் ராமர் ,

மல்லிகா, மகாலட்சுமி ,காளிராஜ், காந்தி லட்சுமி ,ஜோதி லட்சுமி மற்றும் ராஜு, சுப்புராம் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இது சம்பந்தமாக வழக்கு விசாரணை முடிந்து காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

குறுக்கு விசாரணை –

அ.சா.1 12.00 மணி நேரம் காலதாமதாக என்னிடம் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அ.சா.1 புகார் மனுவை ஏற்கனவே எழுதி கொண்டு வந்து என்னிடம் கொடுத்தார். அ.சா.1 சொல்லச்சொல்ல என்னாலோ எங்கள் காவல்நிலைய அலுவலர் அவர்களாலோ புகார் மனு எழுதப்படவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட மறுநாளான 12.2.2021ம தேதி மதியம் 4.20 மணிக்கு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் நேரத்தில் நானும் மற்ற 4 காவலர்களும் சென்றோம் என்றால் நான் மட்டும் சென்றேன். கூட வந்த காவலர்கள் யார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. 11.2.2021ம் தேதி அதிகாலை 3.00 மணிக்கே சம்பவம் இடம் சென்றேன் என்றால் சரிதான். 11.2.2021ம் தேதி அதிகாலை 3.00 மணிக்கே சம்பவம் இடம் சென்றதாக எனது 161 வாக்குமூலத்தில் குறிப்பிட்டு எதுவும் சொல்ல வில்லைஎன்றால் சரிதான். 11.2.2021ம் தேதி அதிகாலை 3.00 மணிக்கே சம்பவம் இடத்திற்கே சென்ற பின்னரும் நான் அசா.1 என்னிடம் புகார் கொடுக்கும் வரை நானாக எவ்விதமான நடவடிக்கையும் எடுக்க வில்லை என்றால் தீயை அணைப்பதற்கான முயற்சிகள் மேற்கொண்டு புகார்தாரர் புகார் கொடுக்காததால் புகார் கொடுக்கும் வரை காத்திருந்தேன். பின்னர் புகார் கொடுத்ததின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் சம்பவ இடத்திற்கு அதிகாலை 3.00 மணிக்கு சென்றதாகவும் தீ அணைப்பதற்கு முயற்சி செய்ததாகவும் அ.சா.1 புகார் கொடுக்கும் வரை காத்திருந்ததாகவும் ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது குறிப்பிட்டு சொல்ல வில்லை என்றால் சரிதான் . வீடு எரிந்த நிலையில் காணப்பட்டதாக வரைபடம் இட்டு காட்டப்படவில்லை என்றால் சரிதான். மகஜரில் சம்பவ இடமான தீயால் எரிக்கப்பட்டதாக குறிப்பிட்டு சொல்ல வில்லை என்றால் சரிதான்.இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட அ.சா.ஆ 2 முதல் அ.சா.ஆ 5 வரையிலான ஆவணங்கள் மற்றும் சா.பொ.1 வழக்கிற்காக பின்னிட்டு பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று

சொன்னால் சரியல்ல. முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள சாட்சிகளை விசாரணை செய்ய வில்லை என்றால் சரியல்ல.  முதல் விசாரணையில் சொல்லி உள்ளது போல் நான் எவ்வித நடவடிக்கையும் எடுக்க வில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சிகளின் வாக்குமூலம் எதிரிகளின் முன்னிலையில் தட்டெழுத்தருக்கு என்னால் சொல்லப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd/-M.Akiladevi)
உதவி அமர்வு நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.